# எகலியகொட பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 19 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள எகலியகொட பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கேள்வி வைப்புக்கள் மற்றும் உடன்படிக்கை பிணை வைப்பாக கிடைத்திருந்த ரூபா 137,297 பெறுமதியான வைப்புப் பணம் அக் கேள்வி வைப்பு மற்றும் உடன்படிக்கை பிணை என்பன வைப்புக் கணக்கில் வைப்பாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 500,000 இற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வீதிச் செப்பனிடுகையின் கிரயமான ரூபா 990,000 தொகை உரிய சொத்துக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலைகளுக்காக கிடைத்திருந்த ஏற்பாட்டு தொகையான ரூபா 2,000,000 வருமானத் தலைப்பு இல. 3.81 இல் மூலதன உதவியின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதிஏற்பாடுளின் மூலம் ஒப்பந்தபாரர்களின் பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது ரூபா 850,000 தொகை நானாவித வைப்புக் கணக்கின் கீழ் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் முறையே ரூபா 3,668,873 தொகை மற்றும் ரூபா 3,591,218 தொகை என ரூபா 7,260,091 கூட்டுத்தொகையான நீதிமன்றத்தண்டப் பணம் கிடைத்திருந்த போதிலும் முன்னைய வருடத்தைவிட ரூபா 1,000,000 அதிகமாகவும் ரூபா 2,000,000 குறைவாகவும் நீதிமன்றத்தண்டப் பண வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 61,228 தொகை தொங்கல் கணக்கில் வரவு மீதி காணப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 9,304,272 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,004,452 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 553,529 ஆக இருந்தது

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 13 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,720,434 ஆக இருந்ததுடன் உபயோகப்

பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,278,052 ஆக இருந்தது.

(ஆ) வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களைக் விஞ்சி கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 92,102 பெறுமதியான 51 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,221 | 1,615 | 1,458 |
| (ii) | வுாடகை | 4,657 | 4,417 | 331 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 645 | 675 | 23 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,150 | 4,919 | 8,195 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற

தண்டப்பணம் ரூபா 3,591,218 ஆக இருந்ததுடன் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம்

நகரத்தில் முச்சக்கர வண்டித் தரிப்பிடமாக அடையாளப்பட்டு அது தொடர்பாக உப விதிகள் விதித்து வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

2010 மற்றும் 2011 ஆம் அண்டுகளுக்குரிய ரூபா 131,425 தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நிலுவை ஆதனவரி

மீளாய்வாண்டின் போது வரி அறவிடப்படுகின்ற 984 அலகுகள் காணப்பட்டதுடன் அதில் 103 அலகுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,825,586 தொகையான ஆதனவரி நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.6 நிலுவை ஏக்கர் வரி

2011 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் ஏக்கர் வரி அலகுகள் 187 இலிருந்து ரூபா 176,497 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவீல்லை.

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சைபகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் ஏதாவது சமய, வழிபாடு, காலாசார, வினோத அல்லது கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ஆண்டிற்கான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,000 இனை விஞ்சுகின்ற செலவினங்களுக்காக உரிய அமைச்சரின் அங்கீகாரம் வெறவேண்டிய போதிலும் ரூபா 23,500 தொகையான நன்கொடை தொடர்பாக உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடகடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 200,000 இனை விடக் கூடிய வாகன பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் ரூபா 228,320 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவினங்களுக்காக அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையில் முச்சக்கர வண்டியொன்று காணப்படும் போது வாடகை அடிப்படையில் ரூபா 20,275 செலவிடப்பட்டு வெளியாரின் முச்சக்கர வண்டியின் சேவை சபையினால் பெறப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

முருதென்கல ஸ்ரீ சுபத்ராராமயின் மதிலை நிர்மாணிக்கும் வேலையின் அளவிடை அறிக்கை மற்றும் 2011 நவம்பர் 20 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் பிரகாரம் விடய இல. 03 இல் ரூபா 15,582 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் முற்பணம் வழங்கப்படுகின்ற செயற்பாடு நிறைவடைந்ததும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,688,511 தொகையான முற்பணத்தை அதன் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலாவதியான வைப்புக்களான ரூபா 1,549,372 தொகை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் முற்பணக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,383 ஆக இருந்தது.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,464,124 ஆக இருந்தது.

(உ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தினை விஞ்சி அசைவுறாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 24,625 ஆக இருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு